தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

விகாரி, மாசி 30, திருவள்ளுவர் ஆண்டு—2051

2020 மார்ச் 13, வெள்ளிக்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. ப. தனபால்** *அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்
திண்ணியர் ஆகப் பெறின்."

ஒரு செயலைச் செய்ய வேண்டும் என்று எண்ணி, எண்ணியபடி செயல் ஆற்றுவதில் உறுதியுடன் இருப்பாரானால், அவர் எண்ணியபடியே செயலில் வெற்றி அடைவார். (குறுக்கீடு)

1. வினா—விடை நேரத்திற்குமுன் வேறு பிரச்சினையை எழுப்புதல்

திரு. அர. சக்கரபாணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே . . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *கேள்வி நேரத்தில் வேறு எதையும் பேசுவதற்கு அனுமதி கிடையாது. உட்காருங்கள். (குறுக்கீடு) கேள்வி நேரத்தில் அனுமதி கிடையாது, உட்காருங்கள். இப்போது கேள்வி நேரம். (குறுக்கீடுகள்) அனுமதியில்லை, கேள்வி நேரத்தில் வேறு எதுவும் கிடையாது. முதலில் எடுத்தவுடன் நிகழ்ச்சி நிரலில் கேள்வி நேரம்தான். அதற்கு முன்னர் எதுவும் கிடையாது. திரு. அர. சக்கரபாணி உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.*

2. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்—விடைகள். வினா வரிசை எண் 86, மாண்புமிகு உறுப்பினர் திரு. பா. நீதிபதி,*

[2020 மார்ச் 13

மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்)

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்றனர்.)

1. வினா—விடை நேரத்திற்குமுன் வேறு பிரச்சினையை எழுப்புதல்—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர், ஒரு நிமிடம் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் அமைதியாக அமருங்கள். சட்டமன்ற நிகழ்ச்சி நிரலில் முதல் நிகழ்ச்சி கேள்வி—பதில். அது முடிந்ததற்குப் பின்னர், ஏதாவது பிரச்சினைகள் இருந்தால், அப்போதுதான் அதுகுறித்துப் பேச வேண்டுமேயொழிய, கேள்வி—பதில் நேரத்தில் பேசக் கூடாது. சட்டமன்றம் தொடங்கியவுடன், கேள்வி நேரத்தில் இதுபோன்று வேறு பிரச்சினைகளை எழுப்புவது மரபு இல்லை; அது வழக்கமும் இல்லை. அதுபோன்று அனுமதியும் இல்லை. உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்றனர்.)

திரு. அர. சக்கரபாணி, நான் சொல்வதைக் கேளுங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் ஏதாவது பேச வேண்டுமென்றால், கேள்வி நேரம் முடிந்ததற்குப் பிறகு பேசலாம். இப்போது பேச முடியாது. அதற்காக நான் கேள்வி நேரத்தை ஒத்தி வைத்துவிட்டு, உங்களுடைய பிரச்சினையை எடுத்துக்கொள்ள முடியாது. அது விதிகளுக்குப் புறம்பானது. அதை நான் செய்ய முடியாது. அவை நிகழ்ச்சிகள் தொடங்கியவுடன் வினாக்கள்—விடைகள் நேரத்தை நடத்த வேண்டும் என்பதுதான் விதி. கேள்வி நேரம் முடிந்ததற்குப் பிறகு, ஏதாவது பிரச்சினைகள் இருந்தால் அனுமதிக்கலாம். (குறுக்கீடுகள்) அனுமதியில்லை. (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. ப. ரங்கநாதன் உட்காருங்கள். தெளிவாக விதிகள் இருக்கின்றன. முதலில் எடுத்தவுடனே 'வினாக்கள்—விடைகள்' என்றுதான் நிகழ்ச்சி நிரலிலே இருக்கும். கேள்வி—பதில் நேரம் முடிந்ததற்குப் பிறகு, Zero Hour என்று ஒன்றிருக்கிறது. அப்போது என்ன பிரச்சினைகளை வேண்டுமானாலும், நீங்கள் என்னுடைய கவனத்திற்குக் கொண்டுவரலாம். அதில் தேவைப்பட்டால் நான் அனுமதி அளிப்பேன்; தேவையில்லையென்றால் நான் அனுமதி

மறுப்பேன். அதுதான் நடைமுறையில் இருக்கிறது. இப்போது நீங்கள் பேச நினைக்கிற விவகாரத்தை, கேள்வி நேரம் முடிந்ததற்குப் பின்னர், நீங்கள் கேட்டால், அப்போது அதைப் பார்க்கலாம். இப்போது கேள்வி நேரத்தை ஒத்திவைக்க வேண்டுமென்று கேட்பது முறையல்ல; மரபு அல்ல. அதை விதிப்படி செய்யவே முடியாது. ஆகவே, கேள்வி–பதில்தான் முதலில் எடுத்துக்கொள்ளப்படும்.

2. வினாக்கள்—விடைகள்—*தொடர்ச்சி*

உடுக்குறியிட்ட வினாக்கள்—*தொடர்ச்சி*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்–விடைகள். வினா வரிசை எண் 86, மாண்புமிகு உறுப்பினர் திரு. பா. நீதிபதி, மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.*

86—

பள்ளியைத் தரம் உயர்த்துதல்

***57412—திரு. பா. நீதிபதி**:

மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உசிலம்பட்டி தொகுதி, செல்லம்பட்டி ஒன்றியம், நடுமுதலைக்குளம் கிராமத்தில் உள்ள நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) உசிலம்பட்டி தொகுதி, செல்லம்பட்டி ஒன்றியம், நடுமுதலைக்குளம் கிராமத்தில் உள்ள நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த சாத்தியக்கூறுகள் இப்போது இல்லை.